# தமிழ்நாடு தொடக்கக்கல்வி ஆசிரியர் இயக்கங்களின் கூட்டு நடவடிக்கைக்குழு (டிட்டோஜாக்)

நாள்: 20.02.2024

பெறுநர்

மதிப்புமிகு.பள்ளிக்கல்வித்துறை முதன்மைச்செயலாளர் அவர்கள்
ஆறாவது தளம், நாமக்கல் கவிஞர் மாளிகை
தலைமைச் செயலகம்
சென்னை - 9

மதிப்புமிகு ஐயா, வணக்கம்.

பொருள்: பள்ளிக்கல்வி - தொடக்கக்கல்வி - அரசாணை எண்: 243 பள்ளிக்கல்வி EE1(1) நாள்: 21.12.2023 தொடக்கக் கல்வித்துறையில் ஏற்படுத்தும் பாதிப்புக்கள் - தொடக்கக் கல்வித்துறையில் பணியாற்றும் 90 சதவீதத்திற்கும் மேற்பட்ட ஆசிரியர்களின் பதவி உயர்வு மற்றும் முன்னுரிமையைப் பாதித்தல் - மலைப்பகுதிகள் மற்றும் கிராமப்புறப் பகுதிகளில் உள்ள தொடக்க, நடுநிலைப்பள்ளிகளின் வளர்ச்சியில் பின்னடைவை ஏற்படுத்துதல் - தமிழ்நாட்டின் கல்வி நலன், ஆசிரியர் நலன் கருதி அரசாணையை ரத்து செய்திட வேண்டுதல் சார்பாக.

பார்வை :

1.அரசாணை (நிலை) எண்:243 பள்ளிக்கல்வி EE1(1) நாள்: 21.12.2023

2.அரசாணை (நிலை) எண்:400 பள்ளிக்கல்வித்துறை, நாள்:25.05.1995

3.அரசாணை (நிலை) எண்: 166 பள்ளிக்கல்வி நாள்: 07.06.1999

4.அரசாணை (நிலை) எண்: 100 பள்ளிக்கல்வித் (பட்ஜெட்) துறை, நாள்: 27.06.2003

5.அரசாணை (நிலை) எண்: 12 பள்ளிக்கல்வி EE1(1) துறை
நாள்: 30.01.2020

சமீபத்தில் தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள பார்வை 1ல் கண்ட அரசாணை (நிலை) எண்: 243 பள்ளிக்கல்வி EE1(1) நாள்:21.12.2023ன் மூலம் தொடக்கக்கல்வித்துறையின் சார்நிலைப் பணி விதிகளில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. மேலும், தொடக்கக்கல்வித்துறையில் மாநில முன்னுரிமையும் கொண்டு வரப்பட்டுள்ளது.

இதனால் தொடக்கக்கல்வித்துறையில் பணியாற்றும் 35 ஆயிரம் தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியர்கள், 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பதவி உயர்வு பெற்ற பட்டதாரி ஆசிரியர்கள், 70 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இடைநிலை ஆசிரியர்கள் என 90 சதவீதத்திற்கும் மேற்பட்ட ஆசிரியர்களின் பதவி உயர்வு வாய்ப்பும், பணி முன்னுரிமையும் பாதிக்கப்பட்டுள்ளது என்பதைத் தங்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறோம். இதைப் பற்றிய விரிவான விளக்கத்தைத் தங்களுக்குக் கீழ்க்கண்டவாறு கனிவுடன் சமர்ப்பிக்கிறோம்.

பார்வை 2ல் கண்ட அரசாணை (நிலை) எண்: 400 பள்ளிக்கல்வித்துறை, நாள்: 25.05.1995ன்படி நடுநிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர் பதவி உயர்வுக்கான ஊட்டுப் பதவிகளாக பட்டதாரி ஆசிரியர், பட்டதாரி தமிழாசிரியர், தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியர் ஆகிய பதவிகள் இருந்தன. இந்த மூன்று பதவிகளில் பணியில் சேர்ந்த தேதியின் அடிப்படையில் ஒன்றிய அளவில் ஒருங்கிணைந்த முன்னுரிமைப் பட்டியல் தயாரிக்கப்பட்டு நடுநிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர் பதவி உயர்வு வழங்கப்பட்டு வந்தது. காரணம் ஐந்தாவது ஊதியக்குழுவில் மேற்கண்ட மூன்று பதவிகளுக்கும் சம்பள விகிதம் 1400 - 40 - 1600 - 50 - 2300 - 60 - 2600 என்ற ஒத்த நிலையில் இருந்தது.

அடுத்த வந்த 6வது ஊதியக்குழுவில் பட்டதாரி ஆசிரியர் மற்றும் பட்டதாரி தமிழாசிரியர்களுக்கான ஊதிய விகிதம் 5500 - 9000 எனவும், தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு 5300 - 8300 எனவும் நிர்ணயிக்கப்பட்டு தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு அடிப்படை ரூ.200 ஊதியத்தில் குறைத்து நிர்ணயிக்கப்பட்டது. இதன் காரணமாக பட்டதாரி ஆசிரியர்கள் சிலர் தொடக்கப்பள்ளித் தலைமை ஆசிரியர்களை விட அடிப்படை ஊதியம் ரூ.200 அதிகமாகப் பெறுவதால் நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் பதவி உயர்வுக்கான ஊட்டுப் பதவியாக பட்டதாரி

ஆசிரியர் மற்றும் பட்டதாரி தமிழாசிரியர் பதவிகளை மட்டுமே வைக்க வேண்டும் என்றும், தொடக்கப்பள்ளித் தலைமை ஆசிரியர் பதவியை வைக்கக்கூடாது எனவும் கோரிக்கை எழுந்தது.

இதைத்தொடர்ந்து பார்வை 3ல் கண்ட அரசாணை வெளியிடப்பட்டது. அதில் பட்டதாரி ஆசிரியர், பட்டதாரி தமிழாசிரியர் பதவிகளுக்கும், தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியர் பதவிக்கும் இடையே உள்ள ரூ.200 ஊதிய வேறுபாட்டைக் கருத்தில் கொள்ளாமல் ஏற்கனவே இருந்த நடைமுறைப்படியே நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் பதவி உயர்வுக்கு பட்டதாரி ஆசிரியர், பட்டதாரி தமிழாசிரியர், தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியர் ஆகிய பதவிகளின் ஒருங்கிணைந்த முன்னுரிமைப் பட்டியலின் படியே நடுநிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர் பதவி உயர்வு அளிக்கப்பட வேண்டும் எனவும் ஆணையிட்டது.

இந்நிலையில் பார்வை 4ல் கண்ட அரசாணை (நிலை) எண்: 100 பள்ளிக்கல்வி (பட்ஜெட்) துறை, நாள்: 27.06.2003ன்படி நடுநிலைப்பள்ளிகளில் உள்ள 6, 7, 8 வகுப்புகளுக்கு பட்டதாரி ஆசிரியர்கள் மட்டுமே நியமிக்கப்பட வேண்டும் என்றும், ஏற்கனவே 6, 7, 8 வகுப்புகளில் பணியாற்றும் இடைநிலை ஆசிரியர்கள் பணி ஓய்வு பெற்ற பின்பு அப்பணியிடம் பட்டதாரி ஆசிரியர் பணியிடமாக தரம் உயர்த்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது. அதன்படி நடுநிலைப் பள்ளிகளில் 6, 7, 8 வகுப்புகளில் தொகுப்பூதியத்தில் பட்டதாரி ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டனர்.

இந்தச் சூழ்நிலையில் தொடக்கக்கல்வித்துறையின் சார்நிலைப்பணி விதிகளில் பட்டதாரி ஆசிரியர் பணியிடம் இடம்பெறாத நிலையில் பார்வை 5ல் கண்ட அரசாணை (நிலை) எண்: 12 பள்ளிக்கல்வி EE1(1) துறை நாள்: 30.01.2020ன்படி சார்நிலைப்பணி விதிகளில் திருத்தம் செய்யப்பட்டு கீழ்க்கண்டவாறு பணியிடங்கள் வகைப்படுத்தப்பட்டன.

**Class Iல்**

1. வட்டாரக் கல்வி அலுவலர்
2. நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்

**Class IIல்**

1. பட்டதாரி ஆசிரியர் (Tamil)
2. பட்டதாரி ஆசிரியர் (Other than Tamil)
3. பட்டதாரி ஆசிரியர் (Subjects)

Class IIIல்

1. தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியர்
2. இடைநிலை ஆசிரியர்

மேலும், பார்வை 5ல் கண்ட மேற்கண்ட அரசாணையின் படி நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் பதவிக்கு ஒருங்கிணைந்த முன்னுரிமைப் பட்டியலே நடைமுறையில் இருந்தது என்பதையும் தங்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறோம்.

இந்நிலையில் தொடக்கக்கல்வித்துறையில் மாநில முன்னுரிமை கோரி சில ஆசிரியர்கள் உயர்நீதிமன்றத்தில் தொடுத்த வழக்கு எண்கள் WP (MD) Nos: 9424 TO 9444 உள்ளிட்ட பல்வேறு வழக்குகளில் 07.11.2022ல் ஒருங்கிணைந்த தீர்ப்பாணையில் "தொடக்கக்கல்வித்துறையில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு மாநில முன்னுரிமை அல்லது குறைந்தபட்சம் மாவட்ட முன்னுரிமை கொண்டுவர பரிசீலிக்கலாம்" என்று ஆணை வழங்கப்பட்டது. மேலும், அத்தீர்ப்பாணையில் மாநில அல்லது மாவட்ட முன்னுரிமை கொண்டு வந்தால் தொடக்கக்கல்வித்துறையில் மூத்தோர் - இளையோர் ஊதிய முரண்பாடு உள்ளிட்ட பல்வேறு பிரச்சனைகள் குறையும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. உண்மையிலேயே ஒன்றிய முன்னுரிமை நடைமுறையில் இருக்கும் போதே நூற்றுக்கணக்கில் மூத்தோர் - இளையோர் ஊதிய முரண்பாடு உருவாகிறபோது, மாநில முன்னுரிமை கொண்டு வந்தால் மூத்தோர் - இளையோர் ஊதிய முரண்பாடுகள் ஆயிரக்கணக்கில் உருவாகும் என்பதும் அதன் காரணமாக அரசுக்கு கூடுதல் செலவினம் ஏற்படும் என்பதுமே உண்மையாகும். அதனைத் தொடர்ந்து இது தொடர்பாக அரசுக்கு அறிக்கை தர அரசாணை (3டி) எண்: 15 பள்ளிக்கல்வி (தொ.க1(1)) துறை நாள்: 22.09.2023ன்படி பள்ளிக்கல்வி இயக்குநர், தொடக்கக்கல்வி இயக்குநர், பள்ளிக்கல்வி இயக்குநர் (பணியாளர் தொகுதி) ஆகியோர் கொண்ட மூவர் குழு அமைக்கப்பட்டது.

மேற்கண்ட குழு மாநில முன்னுரிமை தொடர்பாக ஆசிரியர் சங்கங்கள் மற்றும் ஆசிரியர்களிடம் எவ்விதக் கருத்தும் கேட்காத நிலையில் அரசாணை (நிலை) எண்: 243 பள்ளிக்கல்வி EE1(1) நாள்: 21.12.2023 வெளியிடப்பட்டு தொடக்கக்கல்வித்துறையில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு மாநில முன்னுரிமை கொண்டுவரப்பட்டுள்ளது. மேலும் நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் பதவி உயர்வுக்கான ஊட்டுப் பதவிகளாக பட்டதாரி ஆசிரியர் மற்றும் தமிழாசிரியர் பதவிகள் இருக்கும் எனவும் சார்நிலைப்பணி விதிகளில் திருத்தம் கொண்டுவரப்பட்டு

தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியர் பதவி அதிலிருந்து நீக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 29 ஆண்டுகளாக இருந்த நடைமுறை மாற்றப்பட்டுள்ளது. இதன் காரணமாக 35 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியர்கள் தாங்கள் நேரடியாக நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் பதவி உயர்வு பெறும் வாய்ப்பை இழந்துள்ளனர்.

அதேபோன்று தொடக்கக்கல்வித்துறையில் பட்டதாரி ஆசிரியர் பதவி உயர்வுக்கான ஊட்டுப் பதவிகளாக தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியர், இடைநிலை ஆசிரியர் ஆகிய பணியிடங்கள் இருந்தன. ஒரு ஒன்றியத்தில் பட்டதாரி ஆசிரியர் பதவி உயர்வுக்குத் தகுதியான தொடக்கப்பள்ளித் தலைமை ஆசிரியர் இல்லாத நிலையில், அந்த ஒன்றியத்தில் உள்ள தகுதியான இடைநிலை ஆசிரியருக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டு வந்தது. ஆனால், அரசாணை: 243 பள்ளிகல்வி EE1(1) துறை நாள்: 21.12.2023ல் பட்டதாரி ஆசிரியர் பதவி உயர்வுக்கான ஊட்டுப் பதவியாக தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியர் பதவி மட்டுமே என மாற்றப்பட்டுள்ளது. இதன் காரணமாக நேரடியாக பட்டதாரி ஆசிரியராகும் வாய்ப்பு இடைநிலை ஆசிரியர்களிடமிருந்து பறிக்கப்பட்டுள்ளது. இதனால் 70 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இடைநிலை ஆசிரியர்களின் பதவி உயர்வு வாய்ப்பு பாதிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அரசாணை 243ன் காரணமாக தொடக்கப்பள்ளித் தலைமை ஆசிரியர்கள், இடைநிலை ஆசிரியர்கள், பதவி உயர்வு பெற்ற பட்டதாரி ஆசிரியர்கள் ஆகியோரது பதவி உயர்வு வாய்ப்புக்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக தொடக்கக்கல்வித்துறையில் பணியாற்றும் 90 சதவீத ஆசிரியர்களின் பதவி உயர்வு பாதிக்கப்பட்டுள்ளது என்பதைத் தங்களின் மேலான கவனத்திற்குக் கனிவுடன் கொண்டு வருகிறோம்.

மேலும், அரசாணை 243ன் படி தொடக்கக்கல்வித்துறையில் 60 ஆண்டுகாலமாக நடைமுறையில் இருந்த “ஒரு ஒன்றியம் - ஒரு அலகு” என்ற நடைமுறையையும் மாற்றி “மாநிலம் முழுவதும் ஒரு அலகு” என்ற நடைமுறை கொண்டுவரப்பட்டுள்ளது. மாநில முன்னுரிமையால் தொடக்கக்கல்வித்துறையில் பணியாற்றும் 80 சதவீதப் பெண்ணாசிரியர்கள் தங்கள் பதவி உயர்வு வாய்ப்பை இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

காரணம் தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகள் பெரும்பாலும் கிராமங்களிலேயே அமைந்துள்ளன. அவற்றில் பல கிராமங்கள் போக்குவரத்து வசதிகள் இல்லாத கிராமங்கள். ஒன்றிய அளவில் முன்னுரிமை பேணப்படும் நிலையில்

பெண்ணாசிரியர்கள் ஒன்றியத்திற்குள் பதவி உயர்வில் செல்லும் சூழல் இருந்தது. தற்போது மாநில முன்னுரிமையின்படி தமிழ்நாட்டின் ஒரு மூலையிலிருந்து மற்றொரு மூலைக்கு, ஒரு மாவட்டத்திலிருந்து மற்றொரு மாவட்டத்திற்கு என பலநூறு கிலோ மீட்டர்கள் தாண்டி பதவி உயர்வு வழங்கினால் பெண் ஆசிரியர்களால் அங்கு செல்ல முடியாது. இதனால் அவர்கள் பதவி உயர்வைத் துறக்கும் நிலையே ஏற்படும்.

மேலும், தொடக்கக்கல்வித்துறையைப் பொறுத்த அளவில் அந்தந்தப் பகுதிகளில் வசிப்பவர்கள் பள்ளிகளில் பணியாற்றும்போது தான் அங்குள்ள மக்களின் வட்டார வழக்கு, மக்களின் பழக்க வழக்கம், நடைமுறை வாழ்க்கை முறை ஆகியவற்றை உணர்ந்து மாணவர்களுக்குச் சிறப்பாகக் கல்வி கற்பிக்க முடியும். எனவே தான் கடந்த 60 ஆண்டுகாலமாக இந்நடைமுறை தமிழ்நாட்டில் கடைப்பிடிக்கப்பட்டது. இதனால் தமிழ்நாட்டில் தொடக்கக்கல்வித்துறை மிகச் சிறப்பாக செயல்பட்டு வந்தது.

மேலும், மாநில முன்னுரிமை நடைமுறைக்கு வரும்போது, மலைகிராமங்கள் மற்றும் குக்கிராமங்களில் உள்ள பள்ளிகளின் ஆசிரியர் பற்றாக்குறை ஏற்பட்டு அப்பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் கல்வி நலன் வெகுவாகப் பாதிக்கப்படும் சூழல் உருவாகும். எனவே, அரசாணை 243 ஆல் தொடக்கக்கல்வி பின்னடைவைச் சந்திக்கும் நிலையே உருவாகும்.

எனவே, அரசாணை (நிலை) 243 பள்ளிக்கல்வி EE1(1) துறை, நாள்: 21.12.2023 என்பது தொடக்கக்கல்வித்துறையில் பணியாற்றும் ஆசிரியர்கள் நலனை மட்டுமின்றி, மாணவர்கள் நலன், கல்வி நலன் ஆகியவற்றையும் பாதிக்கும் நிலை உள்ளதால் உடனடியாக இந்த அரசாணையை ரத்து செய்து உதவிடுமாறு தமிழ்நாடு தொடக்கக்கல்வி ஆசிரியர் இயக்கங்களின் கூட்டு நடவடிக்கைக்குழுவின் (டிட்டோஜாக்) மாநில அமைப்பின் சார்பில் தங்களை வேண்டிக் கேட்டுக்கொள்கிறோம்.

இப்படிக்கு,

(ந.ரங்கராஜன்)
பொதுச்செயலாளர்
தமிழ்நாடு தொடக்கப்பள்ளி
ஆசிரியர் கூட்டணி

(செ.முத்துச்சாமி EX.MLC)
பொதுச்செயலாளர்
தமிழ்நாடு ஆசிரியர் கூட்டணி

(அ.வின்செண்ட் பால்ராஜ்)
பொதுச்செயலாளர்
தமிழக ஆசிரியர் கூட்டணி

(ச.மயில்)
பொதுச்செயலாளர்
தமிழ்நாடு ஆரம்பப்பள்ளி
ஆசிரியர் கூட்டணி

(இரா.தாஸ்)
பொதுச்செயலாளர்
தமிழக ஆரம்பப்பள்ளி ஆசிரியர்
கூட்டணி

(சி.சேகர்)
பொதுச்செயலாளர்
தமிழ்நாடு தொடக்க
நடுநிலைப்பள்ளி பட்டதாரி
ஆசிரியர் சங்கம்

(இல.தியோடர் ராபின்சன்)
பொதுச்செயலாளர்
தமிழ்நாடு தொடக்கப்பள்ளி
ஆசிரியர் மன்றம்

(நா.சண்முகநாதன்)
பொதுச்செயலாளர்
தமிழ்நாடு தொடக்கப்பள்ளி
ஆசிரியர் மன்றம்

(வி.எஸ்.முத்துராமசாமி)
பொதுச்செயலாளர்
தமிழ்நாடு தொடக்கப்பள்ளி
ஆசிரியர் கூட்டணி

(கோ.காமராஜ்)
பொதுச்செயலாளர்
தமிழக தொடக்கப்பள்ளி
ஆசிரியர் கூட்டணி

(சி.ஜெகநாதன்)
பொதுச்செயலாளர்
JSR தமிழ்நாடு தொடக்கப்பள்ளி
ஆசிரியர் கூட்டணி

(டி.ஆர்.ஜான் வெஸ்லி)
பொதுச்செயலாளர்
தமிழக ஆரம்பப்பள்ளி
ஆசிரியர் சங்கம்